உ

# சிவமயம்

## பஞ்சபுராணப் பாடல்கள் – 1

திருச்சிற்றம்பலம்

1. பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

**(தேவாரம்)**

2. முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறார்
பெறுவார் அச்சோவே.

**(திருவாசகம்)**

3. ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

**(திருவிசைப்பா)**

## பஞ்சபுராணப் பாடல்கள் – 1 [தொடர்ச்சி]

4. பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிற்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

(திருப்பல்லாண்டு)

5. உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

(திருப்புராணம்)

6. ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே..

(திருப்புகழ்)

7. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

(வாழ்த்து)

**நமப்பார்வதி பதயே!** – ஹர ஹர மகாதேவா! (3)
**தென்னாடுடைய சிவனே போற்றி**! – என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!
**இன்பமே சூழ்க!** – எல்லோரும் வாழ்க!
**திருச்சிற்றம்பலம்**

உ

## சிவமயம்

# பஞ்சபுராணப் பாடல்கள் – 2

திருச்சிற்றம்பலம்

1. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

(தேவாரம்)

2. பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ

(திருவாசகம்)

3. கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

(திருவிசைப்பா)

## பஞ்சபுராணப் பாடல்கள் – 2 [தொடர்ச்சி]

4. சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

**(திருப்பல்லாண்டு)**

5. ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

**(திருப்புராணம்)**

6. பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற் குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத் திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

**(திருப்புகழ்)**

7. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

**(வாழ்த்து)**

**நமப்பார்வதி பதயே! –** ஹர ஹர மகாதேவா! (3)
**தென்னாடுடைய சிவனே போற்றி!** – என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!
**இன்பமே சூழ்க! –** எல்லோரும் வாழ்க!
**திருச்சிற்றம்பலம்**

உ

## சிவமயம்

# பஞ்சபுராணப் பாடல்கள் – 3

திருச்சிற்றம்பலம்

1. பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட்துறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேன் எனலாமே.

**(தேவாரம்)**

2. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**(திருவாசகம்)**

3. செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி.

**(திருவிசைப்பா)**

## பஞ்சபுராணப் பாடல்கள் – 3 [தொடர்ச்சி]

4. மிண்டு மனந்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

**(திருப்பல்லாண்டு)**

5. வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசமயங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான் செய்
பாதக மனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

**(திருப்புராணம்)**

6. உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கை கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

**(திருப்புகழ்)**

7. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

**(வாழ்த்து)**

**நமப்பார்வதி பதயே!** – ஹர ஹர மகாதேவா! (3)
**தென்னாடுடைய சிவனே போற்றி!** – என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!
**இன்பமே சூழ்க!** – எல்லோரும் வாழ்க!
**திருச்சிற்றம்பலம்**